**பாடம் 2** **ஏப்ரல் 4-10**

# தேவனை அறிந்துகொள்வதற்கு



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 3:1–5; லேவி 20:26; 1சாமு 2:2; 1யோவான் 4:7–19; ஆதி 1:1; 2:7; மத் 1:23; 28:20.

**மனன வசனம்:** ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். யோவான் 17:3.

தேவனோடுள்ள வலுவான உறவுக்கு அவரது குணம்பற்றிய தெளிவான புரிதல்தான் அடிப்படை. அதனால்தான், தேவனுடைய குணம்பற்றி வேதாகமம் சொல்வதை இந்த வாரம் கவனமாகப் பார்க்கப் போகிறோம். நாம் மனதில் வைத்திருக்கவேண்டியது இதுதான்: 'தேவனைப் பற்றிய தவறான புரிதல் எனும் இருள்தான் உலகத்தை மூடிக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் அவரது குணம் பற்றிய அறிவை இழந்து வருகிறார்கள். அதைத் தவறாகப் புரிந்துகொண்டு, விளக்கமளிக்கிறார்கள். இச்சமயத்தில் தேவனிடமிருந்து ஒரு செய்தியை அறிவிக்கவேண்டியுள்ளது, அந்தச் செய்தி அதன் தாக்கத்தால் அறிவைக் கொடுப்பதாகவும், அதன் வல்லமையினால் இரட்சிப்பை அளிப்பதாகவும் இருக்கும். அவரது குணத்தைத் தெரியப்படுத்த வேண்டும். இந்த உலகத்தின் இருளுக்குள் அவரது மகிமையின் ஒளி வீசவேண்டும்; அவரது தயவு, இரக்கம், சத்தியத்தின் ஒளி வீசவேண்டும். அவரது அன்பின் குணத்தை வெளிப்படுத்துகிற செய்தியே உலகத்திற்கு நாம் அறிவிக்கவேண்டிய இரக்கத்தின் இறுதிச் செய்தி ஆகும்.'

தேவனை மிகச்சரியாக விவரிக்கமுடியுமா என்று தெரியவில்லை, எனவே அவரைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறதெனக் காட்டுவதே சிறந்தது. தேவனுடைய அற்புதமான குணாதிசயங்கள்பற்றி அறியவேண்டிய அனைத்தையும் நாம் ஒருபோதும், முழுமையாக அறியப்போவதில்லை; ஆனாலும் அவரைப் பற்றி நாம் அதிகம் கற்றுக்கொள்ளும்போது, அவரை அதிகம் புரிந்துகொள்வோம்; அவர்மேல் நமது அன்பு ஆழமடையும். அதன்மூலம், நாம் அவரோடு இன்னும் நெருங்கி வளர விரும்புவோம், அதன் விளைவாக அவருடைய அன்பையும் குணத்தையும் மற்றவர்களுக்குப் பிரதிபலிக்கமுடியும்.

*2026, ஏப்ரல் 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனைப்பற்றிய தெளிவான காட்சி

தேவனைப்பற்றி உண்மையான, தெளிவான, மாறுபாடில்லாத காட்சியை வேதாகமம் வழங்குகிறது. முழு வேதாகமமும் நமது கண்ணுக்குத் தெரிந்த உலகத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத உலகத்திற்கும் இடையேயுள்ள அந்தத் திரையை அகற்ற முயல்கிறது; நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவது யார்? தேவன் எப்படிப்பட்டவர்? இவற்றை நமக்கு வெளிப்படுத்த வேதாகமம் முயல்கிறது.

ஆதியாகமம்முதல் வெளிப்படுத்தல்வரை, மெய்தேவனைப்பற்றி வாசிக்கிறோம். வேதாமகத்தின்மூலமாகவும், மனிதனாக வந்த தேவனாகிய இயேசு கிறிஸ்துமூலமாகவும் அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய சர்வ வல்லமை, சர்வஞானம், நீதி, தயவு, கனிவு, அன்பு, நீடியபொறுமை, கிருபை, மன்னிப்பு போன்றவற்றை வாசிக்கலாம்;, நம் வாழ்க்கைகுறித்த அவரது சித்தம், மரணத்தை ஜெயிக்கிற அவரது வல்லமை, அவருடைய ராஜரீகம், அவருடைய நித்திய தன்மை போன்றவற்றையும் வாசிக்கலாம்; இவை அனைத்தும் அவரை நேசிப்பதற்கும், அவரோடு ஒரு நிலையான உறவை வைத்திருப்பதற்கும் நமக்கு ஏராளமான காரணங்களைத் தருகின்றன. யோபு 1:12; ஏசா 46:9,10; ஏசா 30:18; உபா 7:9; ரோமர் 2:4; 1கொரி 2:7; 2கொரி 12:9; மத் 6:14; எரே 29:11; யோவான் 11:25; சங் 47ı8; உபா 33:27. தேவன் யார் என்பதையும், அவர் எப்படிப்பட்டவர் என்பதையும் அதிகமாக அறியும்போது, அவரை அதிகமாக நேசித்து, அவருடன் நெருக்கமான, நிலையான ஓர் உறவை வைத்துக்கொள்ள ஆசைப்படுவோம்.

தேவனுடைய குணத்தை முதலில் சந்தேகித்தது லூசிபர்தான். தேவனைப்பற்றி அவன் எழுப்பின சந்தேகம்தான் நம் பிரபஞ்ச வரலாற்றில் மிகப்பெரிய போராட்டத்திற்கு வழிவகுத்தது. அந்தச் சமயம் முதலே ‘தேவனைப்பற்றி மனிதர்கள் அறியாதபடிக்குத் தடுக்கிற காரியங்களால் அவர்களது சிந்தைகளை நிரப்பிக்கொண்டே இருப்பதுதான் சாத்தானுடைய ஓயாத ஆராய்ச்சியாக இருக்கிறது.’ தேவனைப்பற்றி நம் பார்வை எப்படியிருக்கிறது என்றெல்லாம் சாத்தானுக்குக்கவலையில்லை. உதாரணமாக, சர்வமும் கடவுள், பலதெய்வக் கொள்கை, கடவுள் உலகைப் படைத்துவிட்டு விலகிவிட்டார் போன்ற கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்வதில்லை என்பதெல்லாம் அவனுக்குப் பிரச்சினையில்லை; உண்மையான புரிதல் இருக்கக்கூடாது என்பதுமட்டுமே அவனது நோக்கம்.

**ஏவாளிடம் சாத்தான் பேசியதின் குறிக்கோள் என்ன? ஆதி 3:1-5. தேவனுடைய குணம்பற்றி ஏவாளிடம் அவன் சொன்ன பொய்கள் என்ன?**

ஏவாளிடம் சாத்தான் சொல்ல விரும்பிய செய்தி இதுதான்: ‘தேவன் உன்னிடம் இரகசியத்தை மறைக்கிறார். உன்னுடைய நலனில் அவருக்கு அக்கறையில்லை. அவரை நீ நம்பமுடியாது.’ இதை எலன் ஒய்ட் இவ்வாறு விளக்குகிறார்: ‘மாபெரும் போராட்டம் துவங்கியது முதலே, தேவனுடைய குணத்தைத் திரித்துக் காட்டுவதும், அவரது பிரமாணத்திற்கு எதிராகக் கலகத்தைத் தூண்டுவதும் தான் சாத்தானுடைய நோக்கமாக இருக்கிறது.’

**தேவனுடைய குணம் எவ்வாறு திரித்துக் காட்டப்படுகிறது? மிகமுக்கியமாக, சிலசமயங்களில் நீங்கள் எவ்வாறு மற்றவர்களிடம் அவரது குணத்தைத் திரித்துக் காட்டியிருக்கிறீர்கள்? திரித்துக் காட்டியிருந்தால், ஆவியானவருடைய உதவியால் நீங்கள் மாறுவதற்கு என்ன செய்யலாம்? உங்களைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு தேவனுடைய அன்பை எவ்வாறு காட்டலாம்?**

# தேவன் பரிசுத்தர்

பரிசுத்தம் என்பது பெரும்பாலும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிற ஒரு வார்த்தையல்ல; ஒருவேளை நம்மைச் சுற்றிலும் நம்மிடத்திலும் பரிசுத்தமான விஷயங்கள் மிகக்குறைவாக இருப்பதே காரணமாக இருக்கலாம். ஓய்வுநாள் என்பது காலத்தில் பரிசுத்தமானது. தேவன் பரிசுத்தமானவர். தேவனைத் தவிர்த்துப் பார்த்தால், நமது அன்றாட வாழ்வில் பரிசுத்தம் என்பது இருக்காது. தேவனுடைய குணங்களுடன் தொடர்புடைய பண்புகளை ஆராய்ச்சிசெய்தால், பரிசுத்தம் என்பது தேவனை மையமாக வைத்து இருப்பதைக் காணலாம். ஆனால் அதன் அர்த்தம் என்ன?

**பின்வரும் வசனங்கள் தேவனை எவ்வாறு விவரிக்கின்றன: லேவி 20:26; 1சாமு 2:2; ஏசா 57:15; எசே 38:23.**

வேதாகமம் தேவனைப் பரிசுத்தத்தின் இலக்கணமாக விவரிக்கும்போது, அவர் தீமையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர், தீமைக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதைக் குறிக்கிறது. தேவன் ஆரம்பம்முதல் நூறு விழுக்காடு நல்லவராகவே இருக்கிறார். எனவே, தேவனுடைய பரிசுத்தம் என்பது அவருடைய மற்ற எல்லாச் சாற்றுப்பண்புகளுக்கும் மையமாக விளங்குகிறது.

உதாரணமாக, தேவனுடைய அன்பு சுத்தமானது, பரிசுத்தமுள்ளது, அதில் சுயநல, அகங்கார நோக்கங்கள் கொஞ்சமும் இல்லை. அவரது சர்வஞானம் பரிசுத்தமானது; அதாவது அதில் தீயநோக்கங்களே இருக்காது. ஒருவேளை சர்வ ஞானியான தேவன் பரிசுத்தராக இல்லாவிட்டால், அவரை நாம் நம்புவோமா? நிச்சயமாக நம்பமாட்டோம்! அவரைக் கண்டு பயப்படுவோம், வேறு வழியில்லை.

தேவனுடைய சர்வவல்லமை பரிசுத்தமானது. தேவன் சர்வவல்லவராக இருந்து, பரிசுத்தமற்றவராக இருந்தால் என்னவாகும்? அவர் வல்லமைமிக்க, தீய கொடுங்கோலராகத்தான் இருக்கமுடியும். தேவனுடைய பரிசுத்தம்தான் நாம் அவரை உண்மையாக நேசிக்கச்செய்கிறது; ஏனெனில் அவர் ஆரம்பம்முதல் எப்போதும் நல்லவராகவேஇருக்கிறார். அதனால்தான் தேவனுடைய குணத்தைப் புரிந்துகொள்வதில், பரிசுத்தம் மிகமுக்கிய பண்பாக இருக்கலாம். ஆனாலும், இதுதான் அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட பண்பாகவும் உள்ளது.

தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளாகப் பிரவேசித்த மோசே, ஏசாயா, எசேக்கியேல், தானியேல், யோவான் போன்றவர்களுடைய முதல் எதிர்வினை என்னவாக இருந்தது? தங்கள் காலணிகளைக் கழற்றினார்கள்; முகங்களை மறைத்துக்கொண்டார்கள்; அல்லது செத்தவர்கள்போல கீழே விழுந்தார்கள். மனிதர்களாகிய நாம் பாவத்தன்மையும் பரிசுத்தமின்மையும் உள்ளவர்களாக இருப்பதால், தேவனுடைய பிரசன்னத்தில் நம்மால் நிற்கமுடியாது. தேவனுடைய முகத்தைப் பார்க்கிற எந்த மனிதனும் உயிரோடு இருக்கமுடியாது. அதுபோல எலன் ஒய்ட் தரிசனத்திற்குள்ளாகச் சென்றபோது, 'மகிமை, மகிமை, மகிமை' என்று கதறுவாராம், ஏனென்றால், அதுதான் அவர் கண்டதை மிகச்சரியாக விளக்குகிற வார்த்தையாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. இரவும்பக லும் ஓய்வில்லாமல் இருக்கிற நான்கு ஜீவிகளும் 'இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்' என்று சொல்லுகின்றன. வெளி 4:8.

**மெய்யாகவே தேவன் முற்றிலும் பரிசுத்தர். நாம் அவரிடம் செல்லும்போது, அவரை அவ்வாறுதான் பார்க்கவேண்டும். இது உங்களுக்கு எவ்வாறு ஊக்கத்தைக் கொடுக்கிறது? உங்களது சொந்த குணத்தைப் பொறுத்தவரை இது என்னென்ன சவால்களை உங்கள்முன் வைக்கிறது?**

# தேவன் அன்பாகவே இருக்கிறார்

தேவனுடைய குணம் என்றாலே, கிறிஸ்தவர்கள் அதிகம் பயன்படுத்துகிற வார்த்தை அன்பு. 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' 1யோவான் 4:8. 'தேவன் அன்புகூருகிறார்' என்று யோவான் சொல்லவில்லை, மாறாக 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்கிறார். அன்புதான் அவரது ஆகுபொருள். பலர் அன்பைக் குறித்துத் தங்களுக்கிருக்கிற கருத்தை வைத்தே தேவனை வரையறுக்கிறார்கள், ஆனால் பெரும்பாலும் அன்பைக்குறித்துக் குறைவுள்ள பார்வையே அவர்களிடம் காணப்படுகிறது. மாறாக, தேவன் யார்? தேவ ஏவுதலால் எழுதப்பட்ட தம் வார்த்தையில் அவர் தம்மைப்பற்றி என்ன வெளிப்படுத்தியுள்ளார்? இதை வைத்தே அன்புக்கு நாம் விளக்கமளிக்கவேண்டும்.

**அன்பைக் குறித்து 1யோவான் 4:7-19 கொடுக்கிற விளக்கம் என்ன?**

தேவனுடைய அன்பு பூரணமானது, இலவசமானது, முற்றிலும் உறவு சம்பந்தப்பட்டது. இதனைத் தம்மில் 'நிலைத்திருக்குமாறு' 1யோவானில் மீண்டும் மீண்டும் அழைப்புக் கொடுப்பதிலிருந்து அறியலாம். ஏனென்றால், 'தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.' 1யோவான் 4:16. தேவன் அன்பாகவே இருக்கிறார்; மேலும், நாம் அன்புகூருவதற்கும் அன்பை வாஞ்சிப்பதற்கும் அவர் நம்மைத் தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார். ஆதி 1:27. எபிரெய மொழியில், அன்பைச் சுட்டிக்காட்டுகிற ஒரு முக்கிய வார்த்தை *ஹெஸெட்*. இது மனிதகுலத்தின்மீது தேவன் வைத்துள்ள உடன்படிக்கை அன்பை விவரிக்கிறது; இது உண்மைத்தன்மை, பாதுகாப்பு, உறுதி, கனிவு ஆகிய பண்புகளை உள்ளடக்கியது. எபிரெயம், கிரேக்கம் போன்ற பண்டைய மொழிகள் தேவனைச் சுட்டிக்காட்ட வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்துகின்றன; அப்பெயர்கள் தேவனுடைய அற்புதமான குணத்தின் வெவ்வேறு அம்சங்களைத் தெளிவாகப் படம்பிடித்துக்காட்டுகின்றன. இங்கே இரண்டு உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

*அடோனாய்*: சகலத்திற்கும் ஆண்டவர், உடன்படிக்கையின் அடிப்படையில் என்றென்றும் ஆட்சிசெய்கிறவர். ஆதி 15:2; நியா 6:15; மல் 1:6; சங். 97:5.

*யேகோவாயீரே*: கர்த்தரே தேவையைச் சந்திப்பார். ஆதி 22:13,14.

இறுதியாக, தேவ அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடு அவர் தம் குமாரனை இப்பூமிக்கு ஈவாக அருளியதும், அவர் பாவிகளுக்காக மரித்ததும். யோவான் 3:16; ரோமர் 5:8. தேவன் இதை மனிதர்களுக்குச் செய்யாமல் இருந்திருக்கலாம், ஆனாலும் நமக்குப் பதிலாக அவர் மரித்ததை உணர்ந்து, அவரிடத்தில் அன்புகூர நாமே மனதாரத் தீர்மானிக்கும்படி அவர் தம் ஈடுஇணையற்ற தியாக அன்பால் இயேசுவைப் பூமிக்கு அனுப்பினார். நமக்கும் தேவனுக்கும் இடையே பாவம் உண்டாக்கின பிளவை இயேசு சரிசெய்தார். ஏசா 59:1,2. அதுமட்டுமல்ல, தேவ அன்பின் பரிபூரண தன்மையை நமக்குக் காட்டும்படியும், மனிதர்கள் அனைவரையும் தம்மிடம் இழுத்துக்கொள்ளும்படியும் அவர் வாழ்ந்தார். யோவான் 14:9; எபிரெயர் 1:3; யோவான் 12:32.

---

**தேவனுடைய பல பெயர்கள் அவருடைய பரிசுத்தத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. 1கொரி 13:4-8 வசனங்களில் 'அன்பு' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'தேவன்' என்ற வார்த்தையைப் பொருத்திப் பாருங்கள். தேவனுடைய குணத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது? அன்பு என்று வருகிற இடத்தில் உங்களுடைய பெயரைப் போட்டுப் பார்த்தால், அது உங்களுக்கு எவ்வளவு தூரம் பொருந்துகிறது?**

# சிருஷ்டிப்பில் தேவன்

வேதாகமத்தின் முதல் சில வார்த்தைகள் மனப்பாடமாக நமக்குத் தெரியும். அதாவது, 'ஆதியிலே தேவன்'. இங்கே தேவன் என்பதற்கான எபிரெயப் பெயர் **ஏலோஹிம்**. இந்த வார்த்தை பொய் 'தேவர்களைக்' குறிப்பிடவும் வருகிறது; ஆனால், ஒரே மெய்யான தேவனைக் குறிக்கும்போது, முழு சிருஷ்டிப்போடும் தொடர்புடைய சர்வமகத்துவமுள்ள, சர்வ வல்லமை படைத்த சிருஷ்டிகரை விவரிக்கிறது; அவர் நமது புரிதலுக்கு அப்பாற்பட்ட, ஆனால் அனைத்தையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற உன்னதமான தேவன். அவர் எவ்வளவு வல்லமையுள்ளவர் தெரியுமா? புதிதாக ஒன்றை உருவாக்க அவர் பேசினாலே போதும். ஆனால் அடுத்த ஆதிகாரத்தில், ஆதி 2இல், தேவனுடைய மற்றொரு பெயர் வருகிறது; அது **யாவே**. இந்தப் பெயர் ஏலோஹிம் என்கிற பெயருடன் தொடர்புடையது அதே சர்வ மகத்துவமுள்ள, சர்வ வல்லமையுள்ள தேவன்; ஆனால் யாவே என்கிற பெயர் ஒரே மெய்யான தேவனுடைய தனிப்பட்ட பெய ராகும்; இது அவர் உடன்படிக்கையின் தேவன் என்பதையும், தம்முடைய மக்களுடன் அன்பான உறவில் இருக்கிறார் என்பதையும் வலியுறுத்த அடிக்கடி வருகிறது.

**தேவனைப்பற்றி ஆதி 1:1உம், 2:7உம் சொல்லவதை ஒப்பிடுங்கள். என்ன தெரிகிறது?**

ஆதி 2:7இல், முதல் மனிதனை மண்ணிலிருந்து கொண்டுவருவதற்கு அவரே தம் கைகளால் அவனைச் செய்திருப்பார். 'தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்'. ஆதாமின் நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதுமளவிற்கு மிக நெருக்கமாக வருகிற தேவன் இவர். யாவே என்கிற பெயர் இவ்வளவு நெருக்கமான ஒரு தேவனைப் படம்பிடித்துக் காட்டுகிறது; ஆனால் தேவனுடைய இந்த இரண்டு குணாதிசயங்களை விவரிக்க வேதாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் மோசே இந்த இரண்டு பெயர்களையும் பயன்படுத்துகிறார்.

எவ்வளவு அற்புதம்! தேவன் ஏலோஹிம் ஆக நம்மைவிட உயர்ந்தவராக இருக்கிறார்; யாவே ஆக அவர் நமக்கு மிகவும் நெருக்கமானவராக இருக்கிறார். எல்லாம் முற்றிலுமாக அவரது கட்டுப்பாட்டில் உள்ளன, அவர் நமக்கு மிகவும் நெருக்கமானவர் என்கிற தேவனுடைய இந்த இரண்டு குணங்களையும் சிந்தித்தால், எவ்வளவு நன்றாக இருக்கிறது! மார்ஸ் மேடையில் அத்தேனே மக்களிடம் பவுல் இவ்வாறு சொன்னார்: 'அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்.' அப் 17:27,28.

தேவனோடு உறவில் வளரவேண்டுமா? அவருடைய குணாங்களைப்பற்றி வேதாகமம் நமக்குச் சொல்கிற கருத்தின் அடிப்படையில், அவரைப்பற்றிய ஒரு தெளிவானதும் சமநிலையானதுமான காட்சியை நாம் தொடர்ந்து தேடுவது மிகவும் அவசியம். அதனால்தான் வேதாகமத்தின் ஒரு பகுதியில் மட்டும் கவனம் செலுத்துவதற்குப்பதிலாக, அதன் அனைத்துப் பகுதிகளையும் வாசிப்பது அவசியம். நாம் தேவனுடைய குணம்பற்றி எவ்வளவு அதிகமாகக் கற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அவரை நேசிக்கக் கற்றுக்கொள்வோம்.

---

**யோபு 36:24-33; யோபு 37இல் தேவனுடைய சில சாற்றுப்பண்புகளை எலிகூ விவரிக்கிறார். யோபு 38,39இல், தம்முடைய சர்வ வல்லமைபற்றி தேவன் சொல்லகிறார். இரண்டையும் வாசியுங்கள். தேவனைப்பற்றி நமக்கு வெளிப்படுத்துவது என்ன?**

# இம்மானுவேல், நம்மோடிருக்கும் தேவன்

கிறிஸ்தவர் அல்லாத ஒருவரிடம், தேவனுடைய குணம்பற்றி வேதாகமம் சொல்வதை விளக்க விரும்பினால், எந்தப் பகுதியைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

இயேசு சம்பந்தப்பட்ட பகுதிதான் சிறப்பாக இருக்கும். இயேசுவானவர் தேவனுடைய பிரதிபலிப்பு மட்டுமல்ல, அவரது வெளிப்பாடு என்றும் வேதாகமம் சொல்கிறது. பல வேதாகம வசனங்கள் இதை விளக்குகின்றன. ஆனால் அதை மிகத்தெளிவாக விளக்குவது யோவான் 14:9. தான். 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று இயேசு சொல்கிறார். பிதாவாகிய தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அதிகமாக அறிந்துகொள்ள நாம் இயேசுவைப் பார்க்கவேண்டும்; அதாவது அவரது வார்த்தைகள், செயல்கள், நடத்தை, மரணம், உயிர்த்தெழுதல் மூலமாக மனிதகுலத்தின்மீது அவருக்குள்ள அளவற்ற அன்பு வெளிப்படுகிறது.

பிதாவின் அன்பும் அக்கறையும் அவரது குமாரனாகிய இயேசுவில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இயேசு யார் என்பதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள, அவருடைய வாழ்க்கைபற்றிய நான்கு கண்ணோட்டங்களை வேதாகமம் கொடுத்திருக்கிறது. மத்தேயு புத்தகத்தில், (யூதர்களுக்காக ஒரு யூதர் எழுதியது) நீண்டகாலமாக எதிர்பார்த்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய மேசியாவாக இயேசுவைக் காண்கிறோம். மாற்கு புத்தகத்தில், மற்றவர்களுக்குச் சேவைசெய்து, தியாகத்துடன் வாழ்கிற இயேசுவைக் காண்கிறோம். அவர் எப்போதும் மற்றவர்களைப்பற்றியே சிந்தித்தார், எப்போதும் பிதாவினுடைய சித்தத்திற்கு இணங்கினார். லூக்கா புத்தகத்தில், இயேசு மனிததன்மையில் மனதுருக்கமுள்ளவராக இருந்ததைப் பார்க்கலாம்; மேலும், நாம் வாசிப்பவை உண்மைதானா என்கிற நிச்சயத்தைப் பெறுவதற்கு அந்த வரலாற்றைப் படிக்கலாம். லூக் 1:3,4. யோவான் புத்தகத்தில் மனிதனாக வந்த தேவகுமாரனை காணலாம்; மேலும், இயேசு தம்மைப்பற்றிக் கூறுகிறபடியே இருக்கிறார் என்பதை நம்புவதற்கான அழைப்புகளை அங்கே காணலாம். நான்கு சுவிசேஷப் புத்தகங்களுமே ஒரே விஷயத்தை ஆராய்ந்தாலும்கூட, 'ஒரே பாணியில் அவை காரியங்களை விளக்கவில்லை. ஒவ்வொரு எழுத்தாளரும் தன் சொந்த அனுபவத்தை வைத்து எழுதுகிறார். பன்முகச்சிந்தனையாளர்களும் தங்கள் கேள்விகளுக்குப் பதில்காண்பதற்கேற்ற விசாலமான, ஆழமான அறிவை இந்தப் பன்முகத்தன்மை வழங்குகிறது. சமீபத்தில் நீங்கள் எந்தச் சுவிசேஷப் புத்தகத்தை வாசித்தீர்கள்?

**மத்தேயு 1:23இல் இயேசுவுக்கு ஒரு குறிப்பிட்ட பெயர் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய குணத்தைப் புரிந்துகொள்ள இது ஏன் மிகமுக்கியமானது? மத்தேயு 28:20ஐ வாசியுங்கள், குறிப்பாக அதன் கடைசிப் பகுதியில் கவனம் செலுத்துங்கள். இந்த இரண்டு வசனங்களையும் ஒப்பிடுங்கள். என்ன புரிகிறது?**

தேவனுடைய குணம் என்கிற மிகப்பெரிய தலைப்பை மேலோட்டமாக மட்டுமே பார்த்திருக்கிறோம். நாம் நினைப்பதைவிட தேவன் மிகப்பெரியவர், மிகவும் ஆச்சரியத்திற்குரியவர், நித்தியகாலம் முழுவதும் அவரைப்பற்றி அறிந்துகொண்டே இருப்போம்.

---

**தேவன் யார் என்பதற்காகவும், அவர் நம் வாழ்வில் செய்தவைகளுக்காகவும், செய்து கொண்டிருப்பவைகளுக்காகவும் நம்முடைய துதிக்குப் பாத்திரராக இருக்கிறார். அவரைத் துதித்து ஜெபிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். தேவனைப்பற்றி வேதாகமம் சொல்வதைச் சொல்லி ஜெபிக்கவேண்டும். உதாரணமாக, தேவனே, 1யோவான் 4:8 இல் நீர் சொல்வதுபோல, நீர் அன்புள்ளவராக இருப்பதற்காக நன்றி' என்று ஜெபிக்கலாம்.**

# மேலும் படிக்க:

'தம் மக்கள் தம் குணத்தைப் பிரதிபலிக்க தேவன் அழைக்கிறார், அதைச் செய்வதற்கு அவரை நாம் முதலில் அறிந்திருக்கவேண்டும். நம் பாவக்கண்கள் பெரும்பாலும் அவரது பரிசுத்தமான, பூரணமான வழிகளைத் தவறாகப் புரிந்துகொள்வதால், அவரைத் தெளிவாகப் புரிந்துகொள்ள சிறந்த வழி, ... வேதாகமத்தை ஆராய்ந்து பார்ப்பதுதான்.

'தலைமுறை தலைமுறையாக தகப்பன்மாரின் இருதயங்களிலிருந்து கடந்து வந்த சகல வகை அன்பும், மனித ஆத்துமாக்களில் ஊற்றெடுத்த அனைத்துக் கனிவான உணர்வுகளும், தேவனுடைய எல்லையற்ற, வற்றாத அன்போடு ஒப்பிடுகையில், ஒரு பரந்த பெருங்கடலுக்கு முன்னால் இருக்கும் ஒரு சிறு நீரோடையைப் போன்றவைதான். நாவால் அதை விவரிக்க முடியாது; பேனாவால் அதைச் சித்திரிக்க முடியாது. உங்கள் வாழ்நாளின் ஒவ்வொரு நாளும் நீங்கள் அதைத் தியானிக்கலாம்; அதைப் புரிந்துகொள்வதற்காக வேதாகமத்தைத் தீர்க்கமாக ஆராயலாம்; பரலோகத் தகப்பனின் அன்பையும் இரக்கத்தையும் கிரகிக்க முயற்சி செய்ய தேவன் உங்களுக்குத் தந்துள்ள ஒவ்வொரு ஆற்றலையும் திறமையையும் நீங்கள் பயன்படுத்தலாம்; அப்படியிருந்தும், அதற்கப்பால் ஓர் எல்லையற்ற ஆழம் உள்ளது. இந்த உலகத்திற்காக மரிக்கத் தம்முடைய குமாரனையே கொடுத்த தேவ அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை உங்களால் ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது; ... இருப்பினும், நாம் வேதாகமத்தை வாசிக்கும்போதும், கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் மீட்பின் திட்டத்தைத் தியானிக்கும்போதும், இந்த உன்னதமான கருப்பொருள்கள் நமது புரிதலுக்கு மேன்மேலும் வெளிப்படும்'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவனைப்பற்றிய புரிதலில் உங்களில் அதிக தாக்கத்தை உண்டாக்கியது எது?*
2. *தேவனோடுள்ள உங்களது உறவை வலுவாக்கவும் உறுதிப்படுத்தவும் அவருடைய வேறு என்ன சாற்றுப்பண்புகளை ஆராயலாம்?*
3. *கிறிஸ்துவிடம் செல்லும் வழி புத்தகத்தின் முதலாம் அதிகாரம் தேவனுடைய குணாதிசயங்கள் மற்றும் இயேசுவைப்பற்றிய என்ன புதிய புரிதல்களை உங்களுக்குள் தூண்டி, சிந்திக்க வைத்தது?*
3. *உங்கள் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களிடம் தேவனைப்பற்றிய சரியான, துல்லியமான காட்சியைப் பகிர்வதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?*
3. *நாம் பாவிகள், பரிசுத்தமற்றவர்கள் என்பது உண்மையாக இருந்தாலும், தேவ மக்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வார்கள் என்று தெளிவாகச் சொல்லுகிற வேதாகம அறிக்கைகளும் உள்ளன. 1பேதுரு 1:13–16; ரோமர் 6:22; எபி 12:14. தேவன் பரிசுத்தராக இருக்கிறார்; நாமும் பரிசுத்தமுள்ளவர்களாக வாழ அழைக்கிறார். ஆனால் பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழ்வதென்றால் என்ன?*

**பாடச்சுருக்கம்:** சிருஷ்டிப்பின் துவக்கம்முதலே, நம்முடன் நெருக்கமான ஓர் உறவை உருவாக்க தேவன் விரும்பினார். அவரது குணம்பற்றி நமது புரிதலைத் தகர்ப்பதே சாத்தானுடைய இலக்காக இருந்தாலும், தேவன் தம்முடைய வார்த்தை மூலமாகவும், தம்முடைய குமாரனாகிய இயேசு மூலமாகவும் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். இறுதியாக, தேவனுடன் நம் உறவை வலுவாக்க விரும்பினால், தேவனைப்பற்றிய தெளிவான, அழகான காட்சியைப் பெற்றிருக்கவேண்டியது அவசியம்.

# ஓய்வுநாளில் விமானத்தை இயக்க மறுத்தல்

செவந்த்–டே அட்வென்டிஸ்ட் தொழில்முனைவோரான காசெரேகா மகுலு கவோட்சி, காங்கோ ஜனநாயகக் குடியரசில் விவசாயம், மீன்பிடித்தல், ஆடை வணிகம் மற்றும் கவோட்சி ஏர்லைன்ஸ் என்கிற சரக்கு விமான நிறுவனம் உள்ளிட்ட ஒரு வணிக சாம்ராஜ்யத்தை உருவாக்கினார். ஒரு கட்டத்தில், கவோட்சி ஏர்லைன்ஸ் கென்யாவிலுள்ள ஒரு கூட்டாளரிடமிருந்து போயிங் 707 ரக ஜெட் விமானத்தை குத்தகைக்கு எடுத்தது. இது ஒரு சிக்கலான ஒப்பந்தம்: கென்ய கூட்டாளர் துபாயைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திடமிருந்து அந்த விமானத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார், அந்த துபாய் நிறுவனம் பிரிட்டனில் உள்ள உரிமையாளரிடமிருந்து அதைப் பெற்றிருந்தது. ஒப்பந்தப்படி, கவோட்சி ஏர்லைன்ஸ் ஈட்டும் லாபத்தை கென்யா, துபாய் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலுள்ள நிறுவனங்களுடன் பகிரவேண்டும்.

மோசமான வானிலை காரணமாக ஒரு வெள்ளிக்கிழமை அன்று விமானப் பயணம் ரத்து செய்யப்பட்டது. அந்த விமானத்தை சனிக்கிழமை அன்று இயக்கவேண்டும் என்று கென்ய கூட்டாளர் வற்புறுத்தினார். ஆனால் “நான் எந்தச் சூழலிலும் ஓய்வுநாளில் விமானத்தை இயக்க மாட்டேன்” என்று காசெரேகா மறுத்துவிட்டார்.

அந்தக் கூட்டாளர் துபாய் கூட்டாளரை தொலைபேசியில் அழைத்தார். ‘நாம் இவருக்கு நம்முடைய ஜெட் விமானத்தைக் கொடுத்தோம், ஆனால் அவர் சனிக்கிழமையன்று பறக்க மறுக்கிறார். அவரிடம் பேசிப் புரியவைக்க முயற்சி செய்யுங்கள். இது ஒரு வணிக விஷயம்‘ என்று சொன்னார். துபாய் நிறுவனம் காசெரேகாவிடம் பேசியது, ஆனால் அவர் தனது முடிவில் உறுதியாக இருந்தார். எனவே, துபாய் நிறுவனம் பிரிட்டிஷ் உரிமையாளரைத் தொடர்புகொண்டது. அவர் காசெரேகாவை அழைத்து, “இன்று ஏன் நீங்கள் விமானத்தை இயக்கவில்லை?” என்று கேட்டார். “நான் ஒரு செவன்த்–டே அட்வென்டிஸ்ட்” என்றார் காசெரேகா. “அது ஒரு திருச்சபையா?” “ஆம், அது ஒரு திருச்சபை.”

அந்தப் பிரிட்டிஷ் உரிமையாளர், துபாய் மற்றும் கென்யாவிலுள்ள தனது கூட்டாளிகளிடம், “இது விசுவாசம் சார்ந்த விஷயம், எனவே அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள்” என்று உத்தரவிட்டார். அந்த நான்கு மாத குத்தகை காலத்தில், காசெரேகா சனிக்கிழமை தவிர வாரத்தின் மற்ற எல்லா நாட்களிலும் விமானத்தை இயக்கினார். பின்னர் அவர் விமானத்தைத் திருப்பி ஒப்படைத்தார். ஒரு வருடம் கழித்து, அந்த பிரிட்டிஷ் உரிமையாளர் காசெரேகாவிற்கு அழைத்தார். “நான் உங்களை நேரில் சந்திக்க விரும்புகிறேன், உங்கள் வீட்டிற்கு வந்து நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்று பார்க்க விரும்புகிறேன்” என்றார்.

அவர் காங்கோ ஜனநாயகக் குடியரசிற்கு வந்து, “நான் ஒரு நோக்கத்தோடு இங்கு வந்தேன், சனிக்கிழமைகளில் விமானத்தை இயக்க மறுக்கும் அளவுக்கு உறுதியான விசுவாசத்தை உடைய மனிதரைப் பார்க்க வந்தேன்” என்றார்.



பின்னர், “நாம் இணைந்து பணியாற்றிய அந்த நான்கு மாதங்களில் ஈட்டியதுபோன்ற ஒரு பெரிய லாபத்தை நான் இதற்கு முன் ஈட்டியதே இல்லை, உங்கள் விசுவாசத்திற்காக, நான் உங்களுக்கு ஒரு சிறிய விமானத்தை இலவசமாக வழங்குகிறேன்” என்றார். அவர் 18 இருக்கைகள் கொண்ட ஒரு தனியார் ஜெட் விமானத்தை காசெரேகாவிற்குப் பரிசாக அளித்தார். “நான் கர்த்தருக்குச் சேவை செய்கிறேன், அவ்வளவுதான்” என்று அவர் எளிமையாகப் பதிலளித்தார்.